18.08.2025 O.S.9/2024 .வா.சா.1 துரைச்சாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு பிரதிவாதியை 50 வருடங்களாக தெரியும். ஒரே தெருவில் குடியிருக்கிறோம். பிரதிவாதிக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளார்கள். அவர்கள் தொழில் எதுவும் செய்து வருகிறார்களா என்றால் செய்து வருவதாக சொன்னார்கள். நான் விவசாயம் தவிர்த்து வேறு தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. எனது மகன்கள் வேலை பார்த்து வருகிறார்கள். எனக்கு இரண்டு மகன்கள், ஒரு மகளும் உள்ளார்கள். ஒரு மகன் உடற்கல்வி ஆசிரியராகவும், மற்றொரு மகன் ரயில்வேதுறையில் வேலை செய்கிறார்கள். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு விவசாய பணியில் ரூ.5 லட்சம் வருமானமாக கிடைத்தது. நானும் எனது மனைவியும் வசித்து வருகிறோம். நான் வேறு யாருக்கேனும் கடனாக பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி முதல்முறை கேட்டதால் கடன் கொடுத்தேன். எதன் நம்பிக்கையில் கடன் கொடுத்தேன் என்றால் அவர் அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருவதாலும், ஒரே தெருவில் குடியிருந்து வருவதாலும், பிரதிவாதியின் கணவர் ராணுவத்தில் வேலை செய்வதாலும் கொடுத்தேன். என் வீட்டில் எப்போதும் ரூ.5 லட்சம் வரை வைத்திருப்பேன். வங்கியில் பணம் வைத்திருந்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி தனியாக தான் வந்து பணம் கேட்டார். பணம் கொடுக்கும்போது வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. ரூ.5 லட்சம் கடனாக கொடுத்தேன். ரூ.500 தாளில் 100 என மொத்தம் 10 கட்டுகள் கொடுத்தேன். நான் எனது ஊரில் சீட்டு நடத்தி வந்தேன் என்றால் இல்லை. நான் சீட்டு நடத்தி வந்ததால் அதற்காக பிரதிவாதி காசோலையை கொடுத்தார் என்றால்

இல்லை. 1.10.2023 ம் தேதி பிரதிவாதியை நான் நேரில் சந்தித்து கேட்டேன். என்னுடன் வேறு யாரையும் அழைத்து செல்லவில்லை. நான் சீட்டு ரூ.50 ஆயிரம் எடுத்ததற்கு காசோலை வாங்கினேன் என்றும், அந்த தொகையை பிரதிவாதி செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. நான் பாதுகாபப்பிற்காக வாங்கிய காசோலையை தற்போது பணம்பறிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்த அன்றே காசோலை பெற்றேனா என்றால் இல்லை. பணம் கொடுத்து 6 மாதம் கழித்து தான் காசோலை வாங்கினேன். காசோலையை வாங்கியவுடன் வங்கி கணக்கில் பணம் இருப்பதாக கூறி என்னிடம் கொடுத்தார். பிரதிவாதி மாதம் ஒரு லட்சம் வருமானம் பெற்று வருவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கோரியபடி ரூ.5,46,270/- கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே என்னுடைய வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.